# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 22.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதி மற்றும் முழுமையான ஒளி ஆகியவற்றை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அறிவு மற்றும் உயர்ந்த நல்லொழுக்கங்கள் ஆகிய அனைத்தும் எந்த பாவமும் அறியாத நபியிடம் ஒளிமயமான வடிவிலும், முழுமைத்தன்மை வாய்ந்ததாகவும், நுணுக்கமாகவும் இல்ஹாம் இறங்குவதற்கு முன்பே தானாகவே ஒளி வீச தயார் நிலையில் இருந்தன.

அதாவது அறிவிப்பூர்வமான திறன்களாக இருந்தாலும் பிற ஏனைய திறன்களாக இருந்தாலும் எல்லா திறன்களிலும் எல்லையில்லாத உயர்நிலையில் வீற்றிருந்தார்கள். ஒவ்வொரு ஒழுக்கத்திலும் ஒவ்வொரு செயலிலும் ஒரு ஒளி நிறைந்திருந்தது. அந்த ஒளி தானாகவே வெளிப்படையாக தென்பட்டது. நூருன் அலா நூர் ஒளியின் மீது ஒளி இருந்தது என்ற திருக்குர்ஆனின் கூற்றை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களிடம் பல ஒளிகள் ஒன்றிணைந்து இருந்தன. இந்த ஒளிகளில் இறைவனின் வஹி என்ற ஒளி இறங்கியது. இந்த ஒளி இறங்கியதன் மூலம் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் எல்லா ஒளிகளையும் தன்னுள் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள்.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது பெயர் **நூர் – ஒளி** என்றும், **முனீர் – ஒளி வீசும் சூரியன்** என்றும் வைக்கப்பட்டுள்ளது.

நூர் மற்றும் சிராஜும் முனீர் ஆகிய பெயர்களை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒளி விளக்கு என்று பெயரிடப்பட்டதில் ஒரு நுட்பமான ஞானம் உள்ளது. ஒரு விளக்கிலிருந்து ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக்கணக்கான விளக்குகளை எரிய வைக்கலாம். அவ்வாறு எரிய வைத்தால் கூட இந்த விளக்கிற்கு எந்த குறையும் ஏற்படுவதில்லை. சந்திரனிலும், சூரியனிலும் இந்த சிறப்பு இல்லை. இதன் பொருள் யாதெனில், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் சிறப்பைப் பெறுவர். இதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சிறப்பான அருள் பெருகாது. மாறாக பொதுவான அருள் பெருகும். ஆக இருள் எல்லை கடந்து விடும் போது இறைவன் தனது சிறப்புப் பண்புகளின் மூலமாக அதாவது ஒரு மனிதனுக்கு தன் புறமிருந்து ஞானம் மற்றும் போதனை ஆகியவற்றை வழங்கி அனுப்புகிறான். இது இறைவனின் நடைமுறையாகும். இவ்வாறு அனுப்பப்பட்டவரின் பேச்சில் நல்ல விளைவுகளையும் அவருடைய கவனத்தில் ஈர்ப்புத் தன்மையையும் வைத்து விடுகிறான். அவருடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இதற்கு தகுதியுடையவர்களை மட்டுமே இது ஈர்க்கிறது. நல்ல விளைவை ஏற்படுத்துகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயர் சிராஜும் முனீர் ஆகும். ஆனால் அபூஜஹில் எங்கே ஏற்றுக் கொண்டான்?

இன்று நான் அல்லாஹ்வின் இந்த ஒளி மற்றும் பிரகாசமான விளக்கு. இது நூருன் அலா நூர் ஆகும். இவருடைய (அதாவது ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுடைய) உயர் தகுதிகள், வெளிப்படையான அழகு ஆகியவற்றை விளக்கும் சில ஹதீஸ்களை எடுத்துரைப்பேன். இதன் மூலம் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுடைய வெளிப்படையான அழகின் ஒளியையும் தெரிந்து கொள்ளலாம். இதே போன்று அவர்களுடைய உயர் தகுதி மற்றும் தமது உம்மத்திற்கு இந்த ஒளியின் பலனை வழங்குவதற்காக கற்றுத் தந்துள்ள சில துஆக்கள் ஆகியவற்றை உங்கள் முன் எடுத்து வைப்பேன். இதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில சம்பவங்களை கூறலாம் என்று நினைத்தேன். ஆனால் நான் எடுத்துள்ள சம்பவங்களே இன்று போதுமானது. எனவே அதைக் கூற நேரம் இருக்காது.

மனிதர்களுள் முழுமையானவர், அவர் பெயர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகும். இவர்களைப் பற்றி இறைவன், நான் வானங்களையும், பூமியையும் உமக்காகவே படைத்தேன் என்று கூறுகிறான்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒளியாக இருந்தார்கள். இதை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களே கூறியதாக ஒரு ஹதீஸில் வந்துள்ளது. மிர்க்காதுல் மஃபாத்தி ஷரஹ் மிஷ்காத் என்ற நூலின் கிதாபுல் ஈமான் என்ற அதிகாரத்தில் இது இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அல்லாஹ் படைத்த முதல் பொருள் எனது ஒளியாகும் என்று கூறினார்கள். அதாவது மனிதர்களுள் முழுமையானவரான இந்த நபிக்கு வழங்கப்படுகின்ற ஒளி முந்தைய படைப்பினங்களிலும், இனி வரும் படைப்பினங்கள் எதிலும் இல்லாத புனித ஒளியாக இருக்க வேண்டும் என்று அல்லாஹ் முன்னதாகவே தீர்மானித்து விட்டான். இந்த ஒளி மனிதர்களுள் முழுமையான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் மட்டுமே இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது தாயார் கண்ட ஒரு கனவை குறிப்பிட்டு இவ்வாறு கூறுகின்றார்கள். எனது தாயார் இவ்வாறு கூறினார்கள். நான் ஒரு முறை கனவு கண்டேன் எனக்குள் இருந்து ஒரு ஒளி வெளிப்பட்டது. அதன் மூலம் ஷாம் நாட்டின் தெருக்கள் எல்லாம் வெளிச்சமாகி விட்டன. இவ்வாறு தொலை தூரத்திலும், பெரிய பெரிய ஊர்களும், பெரிய பெரிய அரசுடனும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் ஒளியால் வெளிச்சம் பெரும் என்ற நற்செய்தியை அல்லாஹ் அவர்களின் தாயாருக்கும் வழங்கியிருந்தான். இந்தத் தாய் தனது மகனின் பிறப்பை விதவையான நிலையில் தான் கண்டார்கள். அல்லாஹ்வின் விதியின் காரணமாக தாய் தன்னுடைய வாழ்நாளில் தனது மகத்துவம் வாய்ந்த மகனுடைய காலகட்டத்தை பார்க்க முடியாமல் போயிற்று. தந்தையை இழந்த இந்தக் குழந்தை எல்லாவற்றையும் இழந்த நிலையில் தன்னுடைய வாழ்க்கையை கழிக்கமாட்டான். மாறாக இவருடைய ஒளி மனித குலத்திற்கு ஒளி கிடைக்கக் காரணமாக அமையப் போகிறது என்று கூறி இறைவன் அந்தத் தாய்க்க ஆறுதல் வழங்கினான்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் தாயார் கண்ட அந்தக் கனவு எவ்வளவு மகத்துவமான முறையில் முழுமையடைந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் இப்போது பார்த்து வருகிறோம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகைப் பற்றி ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் ஹஸன் பின் அலி ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறினார்கள். எனது மாமா ஹஸ்ரத் ஹிந்த் பின் அபீஹாலா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அங்க அடையாளங்களைப் பற்றி கேட்டேன். இவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அங்க அழகை மிக அழகாகக் கூறுகின்றார்கள். எனவே என்னிடமும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் அழகை இவர்கள் கூற வேண்டும் என்று நான் விரும்பினேன். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் கம்பீரமானத் தோற்றமுடையவர்களாகவும் தூய பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவும் தோற்றமளிப்பார்கள். அவர்களது முகம் 14 ஆம் பிறை (அதாவது முழு நிலவு) மின்னுவது போல் ஒளிரும்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் அழகியத் தோற்றம் பற்றி ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் ஸம்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை நிலவு ஒளியுள்ள ஒரு இரவின் போது பார்த்தேன். அப்போது அவர்கள் சிவப்பு நிற ஆடை அணிந்திருந்தார்கள். நான் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களையும் பார்த்தேன். நிலாவையும் பார்த்தேன். என்னுடைய கருத்தின்படி ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நிலவை விட அதிகமாக அழகாக தென்பட்டார்கள்.

பிறகு இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. இதை ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெண்மை நிறமுடையவர்கள் ஆவார்கள். வெள்ளியால் அவர்களை செய்யப்பட்டது போல் வெண்மையாக இருப்பார்கள்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் அழகு மற்றும் ஒளி நிறைந்த முகம் ஆகியவற்றைப் பற்றி இன்னொரு அறிவிப்பில் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் முன் பற்களில் இடையில் சின்னச்சின்ன இடைவெளி இருந்தது. ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் பேசும் போது முன் பற்களின் இடைவெளியிலிருந்து ஒரு ஒளி தென்படும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளி ஒவ்வொரு நல்ல இயல்பு உடையவருக்கும் தென்பட்டது.

இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை வந்த போது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்துள்ளார்கள் என்று கூறப்பட்டது. அப்போது நானும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்ப்பதற்காக மிகவும் ஆவலாக வந்தேன். நான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தைப் பார்த்த போது இந்த முகம் ஒரு பொய்யன் முகம் இல்லை என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒளி விளக்கு என்று பெயரிடப்பட்டிருந்தது. ஒரு விளக்கிலிருந்து ஆயிரக்கணக்கான விளக்குகளை ஏற்றலாம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளிலேயே ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விளக்குகளை ஏற்றினார்கள் என்று முழு உலகமும் கண்டு கொண்டது. இன்றுவரை இந்த ஒளி முழு உலகிலும் பரவிக் கொண்டிருக்கிறது. ஒளி பெற்று பலனடைகின்றவர்கள், இறைவனை வணங்குபவர்கள், நற்செயல்களை செய்பவர்கள் ஆகிய மக்களுக்கு இறைவன் நற்செய்திகளையும் வழங்கியுள்ளான். இவர்கள் சொர்க்கத்தின் வாரிசாவார்கள்.

ஒளியைப் பெறுகின்றவர்களை நான் அடையாளம் கண்டு கொள்வேன் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதன் விளக்கம் ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் அபூஸர் மற்றும் அபூதர்தா (ரலி) அவர்கள் ஆகியவர்களிடமிருந்து இவ்வாறு கேட்டேன். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கியாமத் நாளின் போது நான் எனது உம்மத்தை அடையாளம் கண்டு கொள்வேன் என்று கூறினார்கள். அதற்கு சஹாபாக்கள், யா ரஸுலல்லாஹ்! நீங்கள் உங்கள் உம்மத்தை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வீர்கள்? என்று கேட்டனர். நான் அவர்களை அடையாளம் கண்டு கொள்வேன். ஏனென்றால் அவர்களின் செயல் ஏடுகள் அவர்களின் வலது கையில் கொடுக்கப்படும். அவர்களின் முகங்களின் அடையாளங்களை வைத்து நான் அவர்களை அடையாளம் கண்டு கொள்வேன். அவர்களுக்கு முன்னால் காணப்படும் ஒளியை வைத்து நான் அவர்களை அடையாளம் கண்டு கொள்வேன். இதை இறைவன் சொர்க்கவாசிகளின் அடையாளமாகக் கூறுகிறான். அவர்களின் ஒளி அவர்களுக்கு முன்பாகச் செல்லும்.

சஜ்தா செய்பவர்களைப் பற்றியும், மூஃமின்களைப் பற்றியும் அல்லாஹ் திருக்குர்ஆனில் (இவ்வாறு கூறுகின்றான்:)

அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் விருப்பத்தையும் தேடியவாறு குனிபவர்களாகவும், சிரம் பணிபவர்களாகவும் நீர் அவர்களைக் காண்கின்றீர். அவர்களின் (சிறப்புத் தன்மைக்குரிய) அறிகுறி அவர்களின் நெற்றியில் உள்ள சிரம் பணிதலின் அடையாளமாகும். (48:30)

ஆக அதிகமாக சிரம் பணிவதாலும், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக எப்போதும் தயாராக இருப்பதாலும், அவனது அருளைப் பெற முயற்சி செய்வதாலும் தான் முகத்தில் ஒளி உள்ளது. நற்செயல்கள் செய்பவர்களாகவும், இறை வணக்கம் செய்பவர்களாகவும் இருக்கின்ற மக்களுக்கு முன் அவர்களின் ஒளி சென்று கொண்டிருக்கும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் அருட்கொடையை வேண்டுபவர்களையும், இறை வணக்கத்தை விழிப்புணர்வோடு நிறைவேற்றுபவர்களையும் தான் தமது உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே ஓர் அஹ்மதி இக்கருத்தை சரியாகப் புரிந்து மனதில் (பதிய) வைத்துக் கொள்ள வேண்டும்.

இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்துவதால் ஒளி கிடைக்கும் என்ற கருத்தை வலியுறுத்தி ஒரு ஹதீஸில் இவ்வாறு அறிவிப்பு காணப்படுகிறது. ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இருட்டில் தொழுகைக்காக செல்பவர்களுக்கு கியாமத் நாளின் போது முழுமையான ஒளியின் நற்செய்தி வழங்கப்படும் என்று கூறினார்கள். அதாவது ஃபஜ்ர் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளைத் தொழுவதற்காக பள்ளிவாயில் வருபவர்களுக்கு ஒளி வழங்கப்படும். அவர்கள் சிரமப்பட்டு வருகிறார்கள். ஃபஜ்ர் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளைத் தொழாதவர்களை ஓர் இடத்தில் மிகவும் கடினமாக எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். ஆக, இவர்களே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறும் அவர்களின் கட்டளைகளின்படி நடந்தவாறும், அல்லாஹ்வின் விருப்பத்தைத் தேடியவாறும் இருப்பவர்கள் ஆவர். இவர்கள் தான் அந்த ஒளியைப் பெறுகின்றனர்.

பிறகு பாவமன்னிப்பு மற்றும் சிபாரிசு ஆகியவையும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு சிறப்புத் தொடர்புடையவையாக இருக்கின்றன. ஒரு அறிவிப்பில் இந்தக் கருத்து இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் உத்பா பின் ஆமிர் ஜீசானி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். இறைவன் தான் முன்பு படைத்தவர்களையும், பின்பு படைத்தவர்களையும் (அவ்வலீன், ஆகரீன்) ஒன்று திரட்டி அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவான். தீர்ப்பு வழங்கி முடித்தவுடன் ஈமான் கொண்ட மக்கள் எங்கள் இறைவன் எங்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கிவிட்டான். எங்களுக்காக எங்கள் இறைவனிடம் சிபாரிசு செய்பவர் யாராவது உண்டா? என்று கேட்பார்கள். பிறகு அவர்கள், ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிடம் செல்லலாம். ஏனென்றால் அவரை இறைவன் தனது கைகளால் படைத்துள்ளான். அவரிடம் இறைவன் பேசி இருக்கிறான் என்று கூறுவார்கள். பிறகு ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிடம் சென்று, நீங்கள் எங்களது இறைவனிடம் எங்களுக்காக சிபாரிசு செய்ய வாருங்கள் என்று கூறுவார்கள். நீங்கள் நூஹ் (அலை) அவர்களிடம் செல்லுங்கள் என்று ஆதம் கூறுவார். அப்போது நூஹ் (அலை) அம்மக்களை இப்ராஹீம் (அலை) அவர்களிடம் அனுப்புவார்கள். மக்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் வந்ததும் அவர் மூஸா (அலை) அவர்களிடம் அனுப்புவார்கள். மக்கள் மூஸா (அலை) அவர்களிடம் வந்ததும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களிடம் போகும்படி அனுப்பி விடுவார்கள். மக்கள் ஈசா (அலை) அவர்களிடம் வந்ததும், நான் உங்களுக்கு உங்களது உம்மி நபியிடம் செல்லுமாறு கூறுகிறேன் என்று சொல்வார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு மக்கள் என்னிடம் வருவர். அப்போது இறைவன் என்னை தன் அருகே எழுந்து நிற்க அனுமதி வழங்குவான். என்னுடைய இருப்பிடத்திலிருந்து இதுவரை நீங்கள் யாரும் சுவாசிக்காத அளவு நறுமணம் கமழும் காற்று வீசும். அப்போது நான் எனது இறைவனிடம் ஆஜராவேன். அவன் எனக்கு சிபாரிசு செய்யும் அதிகாரத்தை வழங்குவான். எனது தலையின் முடி முதல் கால் நகம் வரை ஒளியால் நிரப்பி விடுவான். அப்போது நிராகரிப்பாளர்கள் இப்லீஸைப் பார்த்து மூஃமின்கள் தமது சிபாரிசு செய்யும் ஒருவரை தேடிக் கொண்டார்கள். எனவே நீயும் எங்கள் இறைவனிடம் எங்களுக்காக சிபாரிசு செய்ய எழுந்து நில். ஏனென்றால் நீ தான் எங்களை வழிகெடுத்தாய் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். இப்லீஸ் எழுந்திருப்பான். அவனது இருப்பிடத்திலிருந்து இதுவரை நீங்கள் யாரும் சுவாசிக்காத அளவு அதிக துர்நாற்றம் அடங்கிய காற்று வீசும். பிறகு அவன் நரகத்தின்பால் தள்ளப்படுவான்.

பிரச்சனைக்குத் தீர்வு வழங்கப்பட்ட பின்னர், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையான வாக்குறுதி அளித்தான். நானும் உங்களிடம் வாக்குறுதி அளித்தேன். ஆனால் நான் அதை மீறி விட்டேன் என்று ஷய்த்தான் கூறுவான். (14:23)

ஆக, நமது தலைவர், நமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உயர் தகுதி இதுவே ஆகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஒளி எல்லா நபிமார்களின் ஒளியை விடவும் மிக அதிக பிரகாசமாகத் தென்படும். சிபாரிசு செய்வதற்கான அனுமதி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும். எனவே நமது இந்த அன்பிற்குரிய நபியின் மீது ஆயிரமாயிரம்

ஸலவாத் உண்டாவதாக. இவர்களோடு சேர்ந்திருப்பதால் நமது இவ்வுலக வாழ்க்கையும் மறு உலக வாழ்க்கையும் சீரடையும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஒரு அறிவிப்பில் வருகிறது. நீங்கள் காலையில் எழுந்தவுடன் இவ்வாறு கூறுங்கள்.

அகில உலகங்களையும் வளர்ப்பவனாகிய இறைவனுக்காக நாங்களும் எல்லா ஆட்சிகளும் காலையில் விழித்தோம். என் இறைவா! நான் உன்னிடம் இந்த நாளின் நன்மையை வேண்டுகிறேன். இதன் வெற்றியையும், உதவியையும் வேண்டுகிறேன். இதன் ஒளியையும், அருளையும், நேர்வழியையும் வேண்டுகிறோம். இதில் மறைந்திருக்கின்ற தீமையிலிருந்தும் உன்னுடைய பாதுகாவலை வேண்டுகிறேன். மாலைப் பொழுதிலும் இதே துஆவை செய்ய வேண்டும்.

ஆக, ஒளியைப் பெறுவதற்காகவும் இறைவனின் விருப்பத்தை வேண்டுவதற்கும், மறு வாழ்வை சீரமைப்பதற்கும் துஆ செய்வது அவசியமாகும். முந்தைய ஹதீஸ்களில் நாம் கண்டது போன்று இதற்கான மிகச் சிறந்த வழி இறைவணக்கங்கள் ஆகும். குறிப்பாக இரவு நேரத்தில் இறைவனை வணங்குவதாகும். பகலில் இறையச்சம் கொள்வதாகும். பகலில் தொழப்படும் கடமையான தொழுகைகள் ஆகும். இவையாவும் தான் நமக்கு ஒளியைப் பெற்றுத் தரும்.

ஒரு அறிவிப்பில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒளியைப் பெறுவதற்காகவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இருந்து ஒளியின் பலனைப் பெறுவதற்காகவும், அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உள்ளத்தில் நிலைநாட்டுவதற்காகவும் மூஃமின்களுக்கு இவ்வாறு அறிவுரை செய்தார்கள். ஏகத்துவத்தை உள்ளத்தில் ஏற்படுத்தாமல் ஒளி கிடைக்காது. (அந்த அறிவிப்பு இவ்வாறு வருகிறது) ஹஸ்ரத் சஹல் பின் மஆஸ் (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

சூரா கஹ்ஃப் –ன் துவக்க வசனங்களையும், இறுதி வசனங்களையும் ஓதுபவருக்காக இந்த வசனங்கள் அவரது உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒளியாக ஆகிவிடும். இந்த சூராவை முழுமையாக ஓதுபவருக்காக இந்த வசனங்கள் வானத்திற்கும் பூமிக்கும் மத்தியில் ஒளியாக ஆகிவிடும்.

இன்னொரு ஹதீஸில் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க சூரா கஹ்ஃப் –ன் முதல் 10 வசனங்களையும், இறுதி 10 வசனங்களையும் ஓதுமாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள் என்று வருகிறது.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தை மறுக்கின்ற குழப்பமே தஜ்ஜாலின் குழப்பம் ஆகும். இன்றைய நாட்களில் இந்தக் குழப்பம் வளர்ந்து வருகிறது. எனவே இந்த வசனங்களை நாம் மிக அதிகமாக ஓத வேண்டியது அவசியமாகும். தஜ்ஜால் தனது தந்திர வேலையின் மூலம் பல்வேறு வகையான ஷிர்க்கை பரப்பியுள்ளான். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஒப்புக்கொண்டு அதை நிலைநாட்டுவதற்காக இறை வணக்கத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். அதே சமயம் இவ்வசனங்களை சிந்தித்துப் பார்ப்பதும் அவசியமாகும். அப்போதுதான் நாம் நமது உள்ளத்தில் உண்மையான ஏகத்துவத்தை நிலைநிறுத்த முடியும். அதன் பிறகு தான் நாம் இறைவனின் ஒளியில் இருந்து பலன்பெறவும் முடியும். இந்த ஒளியின் உன்னத அடையாளம் மற்றும் முழுமையாக இந்த ஒளியைப் பெற்றவர் உயர் தகுதிகள் வாய்ந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். இவர்கள் தான் முழுமையான மனிதர் என்று அழைக்கப்பட்டார்கள். எனவே வெறுமனே வசனங்களை வாசிப்பதால் மட்டும் மனிதன் ஒளியைப் பெற்றுவிட முடியாது. மாறாக, ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்குக் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றினால் தான் ஒளியைப் பெற முடியும்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், குழப்பத்திலிருந்து உம்மத் தப்பித்திருப்பதற்கும், சமூகத்தை அழகாக்குவதற்கும், மனிதன் தன்னையும் தனது சந்ததிகளையும் இந்த ஒளியிலிருந்து பலன்பெறச் செய்வதற்காக துஆவைக் கற்றுத் தந்துள்ளார்கள். ஒரு அறிவிப்பில் இது தொடர்பாக இவ்வாறு காணப்படுகிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு இந்த வரிகளைக் கற்பித்தார்கள்.

எங்கள் இறைவா! எங்கள் உள்ளத்தில் நன்மையை நிரப்புவாயாக! எங்கள் மத்தியில் சமரசம் ஏற்பட வகை செய்வாயாக! எங்களுக்கு சமாதானத்தின் வழியை காண்பிப்பாயாக! எங்களுக்கு இருளிலிருந்து விடுதலை வழங்கி ஒளியின் பக்கம் அழைத்து வருவாயாக! எங்களை தீங்கிலிருந்தும், குழப்பத்திலிருந்தும் காப்பாயாக! இது வெளிப்படையானதாகவோ அல்லது மறைமுகமாகவோ இருந்தாலும் சரியே! எங்கள் இறைவா! எங்கள் காதுகளிலும், கண்களிலும், உள்ளங்களிலும் பரக்கத்தை வழங்குவாயாக! எங்களை அருள்கூர்ந்து கவனிப்பாயாக! நிச்சயமாக நீ பாவங்களை மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவாய். உனது அருட்கொடைகளுக்கு நன்றி கூறுபவர்களாகவும் அதைப் போற்றுபவர்களாகவும் அதை ஏற்றுக் கொள்பவர்களாகவும் ஆக்குவாயாக! உனது அருட்கொடையை எங்கள் மீது முழுமைப்படுத்துவாயாக!

ஒரு மூஃமினுக்கு இறைவன் வழங்கும் மிகப்பெரிய அருட்கொடை அவரை மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்பவராகவும், நற்செயல் செய்பவராகவும், அல்லாஹ்வை வணங்குபவராகவும் அவனது உரிமைகளை செலுத்துபவராகவும் ஆக்குவதாகும். இதற்காக ஒவ்வொரு மூஃமினும் முயற்சி செய்து வர வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இன்னொரு துஆவும் கற்றுத் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் தாவூஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இவர் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு கேட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழும்போது இவ்வாறு துஆ செய்வதுண்டு. இறைவா! புகழுக்குரியவன் நீ ஒருவனே ஆவாய். வானங்களையும் பூமியையும் இவ்விரண்டில் உள்ள அனைத்தும் நிலைத்திருக்கச் செய்பவனும் நீயே ஆவாய். புகழுக்குரியவன் நீயே. வானங்கள், பூமி மற்றும் அவ்விரண்டில் உள்ள அனைத்தின் ஆட்சியும் அதிகாரமும் உன்னுடையதே! புகழுக்குரியவன் நீ ஒருவனே ஆவாய். வானங்கள் பூமி மற்றும் இவ்விரண்டிலும் உள்ள அனைத்தின் ஒளி நீயே ஆவாய். புகழுக்குரியவன் நீயே ஆவாய். நீயே வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் எஜமானன். நீயே புகழுக்குரியவன் ஆவாய். உனது இருப்பு சத்தியமானது. உனது வாக்குறுதி சத்தியமானது. உனது சந்திப்பு சத்தியமானது. உனது கூற்று சத்தியமானது. சொர்க்கம் சத்தியமானது. நரகம் சத்தியமானது. நபிமார்கள் சத்தியமானவர்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் சத்தியமானவர்கள். கியாமத் நிகழ்வது சத்தியமானது. அல்லாஹ்வே! நான் உன் பக்கம் கவனம் செலுத்துகிறேன். உன் மீது நம்பிக்கை கொள்கிறேன். உன்னையே நம்புகிறேன். உன் பக்கம் குனிகிறேன். உனது உதவியோடு நான் முயற்சி செய்கிறேன். உன்னிடமே நான் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். எனவே முன்னதாக நிகழ்ந்து விட்ட பாவங்களையும், இனி நிகழவிருக்கும் பாவங்களையும் நான் மறைவாகவும், வெளிப்படையாகவும் செய்த பாவங்களையும் மன்னிப்பாயாக! ஆதியும் நீயே! அந்தமும் நீயே! உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவர் வேறு யாருமில்லை.

ஆக உள்ளத்தின் தூய்மை மற்றும் இறை விருப்பத்தைப் பெறுவதற்காக ஷய்த்தானோடு ஒரு போர் நிகழ்த்த வேண்டியது அவசியமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷய்த்தான் முஸ்லிம் ஆகிவிட்டான் என்று கூறியுள்ளார்கள். இருப்பினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு மிகவும் உருக்கமாக துஆ செய்கிறார்கள் என்றால் ஒரு சாதாரண மூஃமின் எவ்வளவு அதிக உருக்கத்துடனும், வேதனையுடனும் இந்த துஆக்களை செய்ய வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள். ஷய்த்தானோடு போர் செய்தல், இதற்காக இவ்வாறு துஆ செய்தல் ஆகியவற்றிற்காக இறைவனின் உதவி தேவைப்படுகிறது. இறைவனின் உதவி இன்றி மனிதன் ஷய்த்தானோடு போர் செய்ய முடியாது. இறைவனின் முன் குனிபவர்களாக இருந்து அவனுக்கு செய்ய வேண்டிய உரிமைகளை செலுத்தி வந்து, அவனது ஒளியை தேடிக் கொண்டிருந்தால் தான் இறைவனின் உதவியைப் பெறுவது சாத்தியமாகும். இறைவன் ஒவ்வொரு மூஃமினுக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இன்னொரு அறிவிப்பில் ஒரு துஆ இவ்வாறு இடம்பெற்றுள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவருக்கு ஏதாவது துன்பம் அல்லது துக்கம் ஏற்பட்டால், அல்லாஹ்வே! நான் உனது அடிமை ஆவேன். உனது அடிமை ஆண் மற்றும் அடிமைப் பெண்ணின் மகன் ஆவேன். (அதாவது நான் ஒரு சாதாரண தாய் தந்தையின் மகன் ஆவேன்). எனது நெற்றி முடி உனது கையில் உள்ளது. (அதாவது நீ எல்லா வல்லமையும் உடையவன்). என் மீது உனது முழு ஆதிக்கமும் உள்ளது. என்னைப் பற்றிய உனது விதி நீதியின் அடிப்படையில் உள்ளது.

நீ எனக்கு என்ன தீர்ப்பு வழங்கினாலும் அதில் அநீதி ஒருபோதும் இருக்காது. நான் செய்த பாவங்களுக்காக நீ தண்டனை வழங்குகிறாய். நான் செய்த நன்மைகளுக்கு உனது கட்டளையை நான் ஏற்று நடந்ததன் காரணமாகவும் உனது அருட்கொடையின் காரணமாகவுமே எனக்கு கூலி கிடைக்கிறது. ஆக நான் ஒருபோதும் அநீதி இழைக்க மாட்டேன் என்று இறைவன் வாக்குறுதி வழங்கியுள்ளான். இதன்படி இறைவன் யாருக்கும் அநீதி இழைப்பதில்லை. அல்லாஹ்வின் கருணை எல்லையில்லாததாகும்.

(ஹதீஸின் தொடர்ச்சி) நீ என்னை நினைவு கூர்ந்துள்ள எல்லா பண்புப் பெயர்கள் மற்றும் நீ உனது படைப்பினங்களில் யாருக்காவது கற்றுத் தந்துள்ள பண்புப் பெயர்கள், அல்லது நீ உனது வேதத்தில் இடம்பெறச் செய்துள்ள பண்புப் பெயர்கள் ஆகியவற்றின் மூலம் உன்னிடம் உதவி தேடுகிறேன். நீ உனது மறைவான விஷயங்களை யாரிடம் அதிகமாக வெளிப்படுத்துகிறாயோ அவரின் மூலம் உன்னிடம் வேண்டுகிறேன். திருக்குர்ஆனை எனது உள்ளத்தின் மகிழ்ச்சி ஆக்குவாயாக. இதை உனது உள்ளத்தின் ஒளி ஆக்குவாயாக. இதை எனது கவலை மற்றும் துயரத்தைப் போக்க காரணமாக்குவாயாக என்று துஆ செய்தால் அல்லாஹ் அவருடைய துயரத்தையும் துக்கத்தையும் போக்கி, மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தருவான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். யா ரஸுலல்லாஹ்! நாங்கள் இதை மனனம் செய்து கொள்ளலாமா? என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏன் கூடாது? இதைக் கேட்பவர் இதை மனனம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.

இதற்கு முன்னரும் ஒரு குத்பாவில் நான் இந்தக் கருத்தைக் கூறி இருக்கிறேன். அல்லாஹ் அவனது ரஸுல் (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆன் ஆகியவற்றைக் கொண்டுதான் ஷய்த்தானின் தாக்குதலிருந்து பாதுகாப்புப் பெற முடியும். இவையே பாதுகாப்புத் தரும் ஒளியாகும். மேலே கூறப்பட்ட துஆவில் திருக்குர்ஆனை மகிழ்ச்சி ஆக்குவதற்கு வேண்டப்பட்டுள்ளது. இதன் கருத்தாவது, அதை ஓதவும், அதன்படி செயல்படவும் அதனைப் புரிந்து கொள்ளவும் அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்குவானாக என்பதாகும். நாம் இந்த துஆவினை ஓதி திருக்குர்ஆனைப் படித்தால், அதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தால் அதன்படி செயல்பட்டால் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமையையும் இறை அடியாருக்கு செலுத்த வேண்டிய உரிமையையும் பேணுவதன் பக்கம் முயற்சி செய்யலாம். கவனம் செலுத்தலாம். இதனால் இறைவணக்கத்தின் தகுதிகள் உயரும்.

கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன. (13:29) என்ற கருத்தை உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். உள்ளத்தின் அமைதிக்கு இது வழி வகுக்கும்.

இன்னொரு அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள். இரவு தொழுகையை முடித்து விட்டு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்ததை நான் கேட்டேன். அல்லாஹ்வே நான் உனது சிறப்பான கருணையை வேண்டுகிறேன். இதன் மூலம் நீ எனது உள்ளத்திற்கு நேர்வழியினை வழங்குவாயாக. எனது பணியை நிறைவேற்றுவாயாக. எனது அரைகுறை வேலையை திருத்தி அமைப்பாயாக. என்னை விட்டு பிரிந்தவர்களை ஒன்றுசேர்ப்பாயாக. என்னோடு தொடர்புடைய மக்களுக்கு சுகமளிப்பாயாக. எனக்கு நேர்வழியை கற்றுக் கொடுப்பாயாக. நான் விரும்புவதை எனக்கு வழங்குவாயாக. உனது சிறப்பான கருணையைத் தருவாயாக. என்னை எல்லா தீங்கிலிருந்தும்

தடுப்பாயாக. அல்லாஹ்வே இதன் பிறகு குஃப்ர் இல்லாத நிரந்தரமான ஈமானையும், உறுதியான நம்பிக்கையையும் வழங்குவாயாக.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியைப் பாருங்கள். இறைவா குஃப்ர் இல்லாத நிரந்தரமான ஈமானையும் உறுதியான நம்பிக்கையையும் வழங்குவாயாக என்று துஆ செய்கிறார்கள் என்றால் நாம் எவ்வளவு அதிகமாக துஆ செய்ய வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். (ஹதீஸின் தொடர்ச்சி)

இவ்வுலகிலும் மறுவுலகிலும் எனக்கு உனது அற்புதங்கள் கிடைக்கும் படி நீ எனக்கு கருணையை வழங்குவாயாக. அல்லாஹ்வே ஒவ்வொரு தீர்மானத்திலும் நான் வெற்றியை வேண்டுகிறேன். ஷஹீதுகளுக்கு வழங்கப்படும் விருந்து உபசரிப்பு, அருளுக்குரிய வாழ்வு மற்றும் எதிரிகளின் மீது வெற்றி, உதவி ஆகியவற்றை உன்னிடம் வேண்டுகிறேன். என் எஜமானனே! நான் எனது தேவைகளை ஏந்திக் கொண்டு உனது சன்னிதானத்தில் ஆஜராகியுள்ளேன். எனது சிந்தனை பலவீனமாகவும், எனது நற்பேறு குறைவாக இருந்தாலும் நான் உனது கருணைக்குத் தேவையுடையவனாகவே இருக்கிறேன். எனவே எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பவனே! உள்ளங்களுக்கு அமைதியினை வழங்குபவனே! நான் உன்னிடமே வேண்டுகிறேன். கடலின் தொலைதூரத்தில் சிக்குண்ட மனிதனை நீ காப்பது போல் என்னை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாயாக. அழிவின் குரல், கபரின் சோதனை ஆகியவற்றிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக. எனது எஜமானனே! என்னுடைய சிந்தனை சென்றடையாத துஆ, உன்னிடம் கை ஏந்தாமல் நான் தவற விட்ட துஆக்கள், என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியாமல் நான் விட்டுள்ள நன்மைகள் ஆனால் உன்னுடைய படைப்பினத்தில் யாருக்காவது அந்த நன்மையை கொடுப்பதாக நீ வாக்குறுதி கொடுத்து வைத்துள்ள நன்மைகள் அல்லது உனது அடியார்களுள் யாருக்காவது நீ கொடுக்கவிருக்கின்ற நன்மைகள் ஆகிய எல்லா நன்மைகளையும் நான் உன்னிடம் வேண்டுகிறேன். அதை நான் விரும்புகிறேன். எனவே நீ எனக்கு அதை வழங்குவாயாக. படைத்து வளர்த்து வருகின்ற என் இறைவனே! உறுதியான தொடர்பு உடையவனே! நேர்வழிக்கு சொந்தக்காரனே! நான் கியாமத் நாளின் போது உன்னிடம் சாந்தியை வேண்டுகிறேன். நிரந்தரமான அந்த வாழ்க்கையில் உனது சன்னிதானத்தில் ஆஜராகின்ற உனது நெருக்கத்தைப் பெற்றவர்கள், உன் முன்னால் குனிபவர்கள், உனக்கு சிரம் பணிபவர்கள், வாக்குறுதியை நிறைவேற்றுபவர்கள் ஆகியவர்களோடு சேர்ந்து நான் சொர்க்கத்தில் நுழைய விரும்புகின்றேன். நிச்சயமாக நீ கருணை காட்டுபவனும் அன்பிற்குரியவனும் ஆவாய்.

இங்கு வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களையும் இதில் சேர்த்துள்ளார்கள். எனவே வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

(ஹதீஸின் தொடர்ச்சி) நிச்சயமாக நீ விரும்புவதை செய்கின்றாய் என்பதில் ஐயம் ஏதுமில்லை. அல்லாஹ்வே! தானும் வழிகெட்டு பிறரையும் வழிகெடுக்கின்றவர்களாக அல்லாமல் நீ எங்களை நேர்வழி பெற்று பிறருக்கு நேர்வழி காட்டுபவர்களாக ஆக்குவாயாக. உன்னுடைய நண்பர்களுக்கும், அன்பானவர்களுக்கும் நாங்கள் சாந்தியின் செய்தியாக இருக்க வேண்டும்.

முஸ்லிம்கள் இந்த துஆவை நேர்மையான நிய்யத்தோடு செய்து வந்தால் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைக்கும். (ஹதீஸின் தொடர்ச்சி)

உனது எதிரிகளுக்கு நாங்கள் போரின் அடையாளமாகவும் இருக்க வேண்டும். நீ நேசிப்பவர்களை நாங்களும் நேசிப்பவர்களாகவும், உன்னை எதிர்ப்பவர்களோடு உனக்காக நாங்களும் விரோதம் கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வே! இவை எங்களது மிகப் பணிவான வேண்டுதல்கள் ஆகும். இதை ஏற்றுக் கொள்வது உனது சொந்த விருப்பத்தைப் பொருத்ததாகும். இறைவா! நாங்கள் செய்கின்ற இந்த வேண்டுதல்கள்தான் எங்களது எல்லா உழைப்பும் நடவடிக்கையும் ஆகும். உன்னையே நாங்கள் நம்பியுள்ளோம். இறைவா! எங்களுக்காக எங்கள் உள்ளங்களில் ஒளியை திறப்பாயாக. எனது கல்லறைக்கும் ஒளியூட்டுவாயாக. எனக்கு முன்னாலும் எனக்குப் பின்னாலும் ஒளியூட்டுவாயாக. எனது இடப்பக்கத்தையும், ஒளியூட்டுவாயாக. எனக்கு மேலும் கீழும் ஒளியை வழங்குவாயாக. எனது கேள்விப்புலனையும் ஒளியால் நிறைத்து விடுவாயாக. எனது பார்வையிலும் ஒளியை நிறைத்து விடுவாயாக.

எனது முடிகளிலும் ஒளியை நிரப்புவானாக. எனது தோலையும் ஒளிமயமாக்குவாயாக. எனது சதைகளிலும் எனது இரத்தத்திலும் ஒளியை நிரப்புவாயாக. எனது மூளையிலும் ஒளியை நிரப்புவாயாக. இறைவா! எனது உள்ளத்தில் ஒளியின் மகத்துவத்தை உருவாக்குவாயாக. அதன் பின் எனக்கு ஒளியை வழங்குவாயாக. இவ்வாறு என்னை ஒளியால் நிரப்பி விடுவாயாக. கண்ணியத்தோடு நிலை கொண்டுள்ள இறைவன் தூய்மையின் உறைவிடமாவான். அவனது தூய்மையை போற்றிய பிறகு வேறு யாருடைய பரிசுத்தத் தன்மையையும் போற்றுவது உகந்தது அல்ல. அவன் தூயவன். அருட்கொடைகள் வழங்குபவன் தூயவன். மரியாதை, கண்ணியம் ஆகியவற்றின் அரசன். மகத்துவமும் கம்பீரமும் உடைய பரிசுத்தமானவன்.

இந்த துஆவை ஓதுபவர்களாகவும், புரிந்து கொள்பவர்களாகவும் இதன் மூலம் பலன் பெறுபவர்களாகவும் இறைவன் நம்மை ஆக்குவானாக. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஒளியிலிருந்து பலன் பெறுபவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒளி கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். எனினும் எவ்வளவு வேதனையுடன் இந்த துஆவை செய்திருக்கிறார்கள். உண்மையில் இந்த துஆ ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தருகிறார்கள். என்னுடைய உம்மத்தைச் சேர்ந்த ஈமான் கொண்ட மக்கள் இந்த துஆவை செய்ய வேண்டும். தலை முதல் கால் வரை முழுமையான ஒளியாக மாற முயற்சி செய்ய வேண்டும். எனது முன்மாதிரியின் படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் உரிமையைப் பேணி வழங்க முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் படைப்பினங்களின் உரிமைகளை வழங்க முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ்(ஸல்) அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் ஒளியை உருவாக்க நிம்மதி இழந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். நாம் நமது எல்லா செயல்களையும் இறைவனின் விருப்பத்திற்காக செய்பவர்களாக இருக்க இறைவன் நல்வாய்ப்பை வழங்குவானாக. நமது எஜமானன், தலைவர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அன்பிற்கு எல்லா உலக நேசத்தை விடவும் அதிக முன்னுரிமை வழங்கி அவர்கள் தமது உம்மத்திடம் வைத்துள்ள நல்ல எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்பவர்களாக இருக்க வேண்டும். எப்போதும் இந்த நூருன் அலா நூர் ஆக இருக்கின்ற ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து பலன் பெற்று நாம் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஹக்கை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். அதே போன்று நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகிக் கொண்டே இருப்போமாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் அருட்கள் வியக்கத்தக்க ஒளியின் வடிவில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நெஞ்சில் ஐக்கியமாகி விடுகிறது. அங்கிருந்து வெளியாகி எண்ணற்ற வடிகால்களின் வாயிலாக வெளியேறி ஒவ்வொரு தகுதியானவரிடம் போய் சேக்கிறது என்பதை நான் பார்க்கிறேன். இதற்குத் தகுதியுடையவர்கள் இறைவனின் உரிமையையும் பேணுபவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நெஞ்சில் இருந்து புறப்படுகின்ற இந்த ஒளி நமது உள்ளங்களிலும் நுழைவதற்கு இறைவன் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 22.01.2010

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**